

# The Four Sahibzadas

TAMIL

PUBLISHED BY AKAAL PURKH KI FAUJ

# 1சீக்கிய மார்க்கத்தின்  நான்கு சாஹிப்சாதாக்கள் - நான்கு இளவரசர்கள்



## மூத்த இளவரசர் : சாஹிப்சாதா அஜித்சிங்.

*பாண்டா* தலத்தில், தன் தந்தையார் குரு கோபிந்த சிங் அவர்கள் தங்கியிருந்த காலத்தில், அன்னை மாதா சுந்தரிக்குப் புதல்வராக 1687 ஆம் ஆண்டு ஜனவரி 26 அன்று இளவரசர் அஜித் சிங் பிறந்தார். அடுத்த வருடமே குரு கோபிந்த் சிங் அவர்கள் அனந்தபூர் சாஹிபுக்கு குடிபெயர அங்கு இளவரசர் அஜித் சிங்கிக்கு முறையான சீக்கிய பயிற்சிகளும் போதனைகளும் கற்பிக்கப்பட்டன. பாபா அஜித் சிங் சமய இலக்கியங்கள், தத்துவம், வரலாறு ஆகியவற்றில் நன்கு பயிற்சி பெற்றார். குதிரை ஏற்றம், வாட்போர், விற்போர் போன்ற வீரக்கலைகளிலும் தேர்ச்சியுற்றார். ஆற்றலும் ஆளுமையும் நிரம்பிய தலைமைக்குணம் கொண்ட இளைஞராக அவர் உருப்பெற்றார்.

ஒவ்வொரு மாலையும் அவரும் அவரது சகோதரர் பாபா ஜூகர் சிங்கும் நண்பர்களை இணைத்துக் கொண்டு இருபடையணிகளை உருவாக்குவார்கள். வாட்களும் அம்புகளும் கொண்டு அவர்கள் பயிற்சிப் போர்களை நடத்தினார்கள். ராணுவ பயிற்சிகளில் ஈடுபடுத்திக்கொள்ளும் தங்கள் புதல்வர்களை குருகோபிந்த் சிங் அவர்கள் பெருமிதத்துடன் பார்ப்பார்.



1699 ஆம் ஆண்டு பைசாகி நன்னாளில் ,புனிதத் தலமாகிய ஆன்ந்தபூர் சாஹிபில் குரு கோபிந்த் சிங் அவர்கள் சீக்கிய சமூகத்தினரிடம் கல்சா என்னும் புதுநெறியை அறிமுகப்படுத்தினார். இந்த சீக்கிய ஞான ஸ்நாண முறை புதிய பாதையை வகுத்தது. குரு கோபிந்த் சிங்கின் புதல்வர்கள் அஜித்சிங்கும் ஜுகர்சிங்கும் ஆயிரக்கணக்கான சீக்கிய மக்களுடன் ஞானஸ்நாணம் ஏற்றனர்.

பாபா அஜித் சிங் ஆற்றலும் துணிச்சலும் நிரம்பிய வீரராகத் திகழ்ந்தார். அவர் தனது தந்தை குரு கோபிந்த் சிங் ஈடுபட்ட போர்களில் இளம் வயதிலேயே ஊக்கத்துடன் பங்கேற்று வீரதீரச் செயல்கள் புரிந்தார். எந்த அச்சுறுத்தல்களும் அவரது கடமைமிகு பாதையில் குறுக்கிட இயலவில்லை.

கல்சா தோற்றுவிக்கப்பட்ட சில காலத்திலேயே பாபா அஜித் சிங்கின் வீரத்திற்கான சவால் காத்திருந்தது. வடமேற்கு பஞ்சாபின் பட்டோகரிலிருந்து திரும்பிக் கொண்டிருந்த சீக்கிய சங்கத் குழுவினர் பயண வழியில் சட்லஜ் நதியின் மறுகரையில் அனந்தசாகிபுக்கு அருகான நூஹ் கிராமத்து ரங்கார்களால் தாக்கப்பட்டு கொள்ளையடிக்கப்பட்டனர். அப்போது இளவரசர் அஜித் சிங் பனிரெண்டு வயது சிறுவர். 1699, மே 13 அன்று பாபா அஜித் சிங் நூறு சீக்கியர்களின் படையுடன் திரண்டு வந்து ரங்கார்களைத் தாக்கி கொள்ளையடிக்கப்பட்ட செல்வங்களை மீட்டெடுத்தார்.



எ
தி
ரி
க
ளி
ன்
மு
த
ல்
தா
க்
கு
த

ல் இலக்கான தாராகார்ஹ் கோட்டையைப் பாதுகாக்கும் பொறுப்பை இளவரசர் சஜித் சிங் ஏற்றார். அனுபவம் வாய்ந்த வீரர் பாய் உதே சிங்குடன் இணைந்து அஜித் சிங் எதிரிகளின் தாக்குதலை முறியடித்தார். 1700 ஆம் ஆண்டு ஆகஸ்டு 29 அன்று இப்போர் நிகழ்ந்தது. அதே ஆண்டு அக்டோபரில் நிமோஹ்கார் போரையும் பாபா அஜித் சிங் வென்றார்.

1701, மார்ச் 15 அன்று , சீக்கிய பக்தர்களின் சங்கத் ஒன்று தாராபிலிருந்து (தற்போதைய சியால்கோட் மாவட்டம்) திரும்பிக் கொண்டிருந்த போது குஜ்ஜார்கள் மற்றும் ரங்கார்களால் வழிமறிக்கப்பட்டது. பாபா அஜித் சிங் போரிட்டு வெற்றிகரமாக அவர்களை முறியடித்தார்.

ஒருமுறை புதிதாகத் திருமணமான பிராமணர் ஒருவர் குரு கோபிந்த் சிங்கிடம் வந்து , ஹொஷியார்பூரின் அருகுள்ள பாஸியின் பதான்கள் தனது மனைவியைக் கவர்ந்து சென்றுவிட்டதாக முறையிட்டார். குரு கோபிந்தின் ஆணையை ஏற்று பாபா அஜித் சிங் நூறு குதிரைவீரர்களுடன் சென்று போரிட்டு பிராமணரின் மனைவியை மீட்டு வந்தார். பதான்களை கடுமையாக தண்டித்து பிராமணரிடம் மனைவியை ஒப்படைத்தார். பாஸியில் தற்போது இந்நிகழ்வின் நினைவாக குருத்வாரா ஒன்று அமையப்பெற்றுள்ளது.

குரு கோபிந்த் சிங் அவர்களின் கல்சா உருவாக்கத்தின் மீது முகலாயப் பேரரசர் ஔரங்கசீப் வெறுப்பு கொண்டிருந்தார். தனது ஆட்சிப் பரப்பில் எவர் ஒருவரும் “சச் பாதுஷா” மெய்யான அரசர் என அழைக்கப்பெறுவதை அவரால் பொறுக்க இயலவில்லை. சீக்கியர்கள் குரு கோபிந்த் சிங் ஜியை அப்படித்தான் அழைத்தனர். மக்கள் குரு கோபிந்தின் சிங்கின் வழியில் அணி திரள்வதை அவர் விரும்பவில்லை. முகலாய அதிகாரிகள் அனந்தபூரிலிருந்து சீக்கியர்களை அப்புறப்படுத்த பல வியூகங்களை வகுத்தனர். முகலாய வீரர்களும் மலைக்குடித் தலைவர்களும் இணைந்த படையொன்று 1705 மே மாதம் அனந்தபூரை முற்றுகையிட்டது. குரு கோபிந்த சிங்கும் சீக்கியர்களும் உணவுத் தட்டுப்பாடுகளின் நெருக்கடியிலும் பல மாதங்கள் நீடித்த அந்த முற்றுகையை எதிர்கொண்டு தாக்குப் பிடித்தனர். பின் நெடுநாள் முற்றுகையில் சோர்வடைந்த முகலாயப் படையினர் , அனந்தபூரை விட்டு புலம்பெயர ஒப்புக்கொண்டால் குருவிற்கு பாதுகாப்பான வெளியேறலுக்கு உறுதியளிப்பதாக அறிவித்தனர்.

இந்த நீண்ட முற்றுகைக் காலத்தில் இளவரசர் அஜித் சிங் தன் துணிவையும் வல்லமையான ஆளுமையையும் சிறப்பாக வெளிப்படுத்தினார். 1705, திசம்பர் 5-6 தேதிகளில் சீக்கியர்கள் அனந்தபூரிலிருந்து வெளியேறிய போது பாபா அஜித் சிங் சீக்கியப் படையின் பின்வரிசையில் தலைமையேற்று பாதுகாப்பளித்தார். முகலாயர்கள் தாங்கள் அளித்த வாக்குறுதியை மீறி சீக்கிய அணியைப் பலவாறாகத் தாக்கினர். அப்போது முகலாயப் படைகளின் அத்துமீறலை

எதிர்கொண்டு மிகுந்த துணிவுடனும் பலத்துடன் போர் புரிந்தார் பாபா அஜித் சிங். பின்னர் அவருடன் பாய் உதே சிங் வந்திணைந்து மற்றொரு முனையில் தன்னந்தனியே எதிரிகளுடன் கடும் போர் புரிந்தார். எதிரிகள் பலரின் தலைகளை தன் வாளுக்கு இரையாக்கியபின் களத்தில் அவர் வீரமரணம் அடைந்தார்.

பாபா அஜித் சிங் தனது தந்தை குரு கோபிந்த் சிங் , சகோதரர் ஜுகர் சிங் மற்றும் ஐம்பது சீக்கிய வீரர்களுடன் ஸர்ஸா நதியைக் கடந்து சென்றார். மென்மேலும் ரூபரிலிருந்து வந்த படைகளால் முகலாயர்கள் பலம் ஓங்கவும், உயிரிழப்புகளால் சீக்கிய படை சிறுக்கவும், சாம்கௌர் சென்றடைந்த பாபா அஜித் சிங் தலைமையிலான படையினர் 1705,டிசம்பர் 6 இல் கார்ஹியில் உயர்ந்த மதில்கள் கொண்ட ஒரு கோட்டை இல்லத்தில் நிலையெடுத்தனர். அனால் மாலர்கொட்லா, ஸிர்ஹிந்த ஆகியவற்றிலிருந்து வந்து குவிந்த படைகள் மற்றும் உள்ளூர் ரங்கார்கள் குஜார்களால் மென்மேலும் பலமடைந்த முகலாயப் படையினர் சாம்கௌரை சுற்றி வலுவான முற்றுகை அமைத்தனர்.



குரு கோபிந்த் சிங் அவர்களின் சஃபர்நாமாவில் சித்திரிக்கப்பட்டுள்ளபடி , 1705, டிசம்பர் 7 ஆம் நாள் சூரிய உதயத்தில் நாற்பதே சீக்கிய வீரர்கள் பல்லாயிரக்கணக்கான முகலாய வீரர்களை எதிர்கொண்டு உக்கிரப் போர் புரிந்தனர். கோட்டைக்குள் இருந்த சீக்கியர்களின் வெடி பொருட்களும் அம்புகளும் தீர்ந்தபோதும் ஐவர் ஐவராகப் பிரிந்து வாள்களும் , குத்தீட்டிகளும் கொண்டு எதிரிகளைத் தாக்கினர். முதல் ஐவர் தாங்கள் வீரமரணத்தை தழுவுவதற்கு முன்பாக நூற்றுக்கணக்கான முகலாய வீரர்களை கொன்றழித்தனர். அவர்களைத் தொடர்ந்து இரண்டாவது , மூன்றாவது குழுவினரும் களத்தில் குதித்தனர். அவர்களும் எதிரியின் கடுமையான தாக்குதல்களுக்கு ஈடுகொடுத்து வன்போர் புரிந்தனர். கோட்டையின் உள்ளே யுத்த தந்திரப்படி நிலைகொண்டிருந்த குரு கோபிந்த் சிங் அவர்கள் போரின் கடும்போக்கை கணித்துக் கொண்டிருந்தார்.

தந்தை குரு கோபிந்த் சிங்கிடம், இளவரசர் அஜித் சிங் தான் களத்தில் குதிப்பதற்கான அனுமதியை வேண்டினார். அவருக்கு நல்லாசி வழங்கிய குரு அவர்கள் பாபா அஜித் சிங்கை சீக்கிய வீரர்களுடன் போர் முனைக்கு அனுப்பினார். இளவரசரும் சீக்கிய வீரர்களும் கோட்டை வாயிலில் வெளிப்பட்டபோது , சத் ஸ்ரீ அகால் “மெய்யானவர் கடவுள்” என்னும் முழக்கம் களம் எங்கும் அதிர்ந்தது.

இளவரசரை முகலாய வீரர்கள் சுற்றிவளைத்தனர். இருப்பினும் அவர்களை முறியடித்து அம்புகளை சரம்சரமாகத் தொடுத்தார் பாபா அஜித் சிங். அதே நேரம் மற்றொரு முகலாயப் படையணி சூழ்ந்து வளைத்து நெருக்கியது. பாபா அஜித் சிங்கும் வீரர்களும் பின்வாங்காது துணிந்து போரிட்டாலும் விரைவிலேயே அம்புகள் தீர்ந்துபோயின. அஜித் சிங் குதிரையில் பாய்ந்து சென்று எதிரிகளின் வளையத்துள் ஊடுருவி வாள் வீசினார். ஒரு எதிரி வீரன் இளவரசரை குத்தீட்டி கொண்டு குறிவைத்து தாக்கினான். சாதுர்யமாக அத்தாக்குதலில் இருந்து பாபா அஜித் சிங் தப்பினாலும் அவரது குதிரை படுகாயமடைந்துவிட்டது. தனித்து நின்ற இளவரசரை எதிரிப் படையினர் அனைத்து திசையில் இருந்தும் சூழ்ந்துகொண்டனர். பத்தொன்பது வயது இளவரசர் அஜித் சிங் கடும் போரின் மத்தியில் இறுதியில் வீரமரணம் அடைந்தார். இளவரசர் மடிந்த தலத்தில், அதன் நினைவாக கத்தல்கார்ஹ் குருத்வாரா இன்று அமையப்பெற்றுள்ளது. அடுத்த படையணியை வழி நடத்திய இளவரசர் ஜுஜுகர் சிங்கும் வீரமரணம் அடைந்தது இத்தலத்தில்தான்.

## இளவரசர் ஜுஜ்கர் சிங்

அனந்தபூர் சாஹிப் திருத்தலத்தில் குரு கோபிந்த் சிங்க் -அன்னை மாதா ஜிதோ ஜி தம்பதியருக்கு 1691, மார்ச் 14 அன்று இரண்டாவது மகனாகப் பிறந்தவர் இளவரசர் ஜுஜ்கர் சிங். தன் மூத்த சகோதரரைப் போலவே இளம்பருவத்திலேயே சீக்கிய சமயக் கோட்பாடுகளுடன் போர்க்கலைகளிலும் தேர்ச்சியுற்றார் ஜுஜ்கர் சிங். தனது எட்டாவது அகவையில் அவர் கல்சா புனிதநிலை பெற்றார். 1705 டிசம்பரில் எதிரிகளின் முற்றுகை காரணமாக அனந்தபூர் சாஹிபை விட்டு புலம்பெயர்வது தவிர்க்க இயலாததாகிவிட்டது. அப்போது 15 வயது நிரம்பிய இளவரசர் ஜுஜ்கர் சிங் உறுதியும் துணிவும் கொண்ட வீரத்திருமகனாகத் திகழ்ந்தார். 1705, டிசம்பர் 6 நள்ளிரவில் அவரது தலைமையிலான படையணி எதிரிகளை முறியடித்து, வெள்ளப் பெருக்கெடுத்த சர்ஸா நதியோடையை குதிரைகளில் அணிவகுத்து வெற்றிகரமாகக் கடந்து சம்கௌளரைச் சென்றடைந்தது.

இரவெல்லாம் பயணித்த களைப்பு நீங்கும் முன்பே மறுநாளே , கார்ஹி கோட்டை இல்லத்தின் மீதான எதிரிகளின் தொடர்ச்சியான வன்தாக்குதலையும் எதிர்கொண்டு அவர் கடுமையாக போர்க்களமாடினார். அந்தக் கோட்டையில்தான் குரு கோபிந்த் சிங் ஜி அவர்கள் தனது இரு புதல்வர்களுடனும் நாற்பது சீக்கிய வீரர்களுடனும் நிலைகொண்டிருந்தார். கோட்டையின் உள்ளே வெடிபொருட்களும் அம்புகளும் தீர்ந்துபோன பின் சீக்கிய வீரர்கள் ஐந்து அணிகளாகப் பிரிந்து முற்றுகையாளர்களை நிராயுதமாக எதிர்கொண்டு தாக்கினர். குரு கோபிந்த் சிங் ஜி அவர்கள் தன் இரு புதல்வர்களையும் கோட்டையின் உச்சிக்கு அழைத்துச் சென்றார். அங்கிருந்து மொத்த போர்க்களமும் புலப்படக் கூடியதாக இருந்தது.



எதிரிகளின் தாக்குதலை முறியடிப்பதற்கான எல்லா ஆயத்தங்களும் செய்யப்பட்டன. சீக்கியப் படையினர் எஞ்சியிருந்த ஆயுதங்களும் வெடிபொருட்களும் கொண்டு நிலையெடுத்தனர். எதிரிகளின் பெருந்திரளுடன் ஒப்பிடும்போது மிகச் சொற்ப எண்ணிக்கையே கொண்ட சீக்கிய வீரர்கள் உணர்விலும் எழுச்சியிலும் மேலோங்கியிருந்தனர். குரு கோபிந்த் சிங் ஜி அவர்களின் உடனிருப்பும் தலைமையும் அவர்கள் நெஞ்சில் தீரமும் துணிச்சலும் ஊட்டியது. எல்லாம் வல்ல இறைமையின் ஆசியுடன் எதிரிகளை முழு பலத்துடன் எதிர்கொள்ள அவர்கள் துணிந்தனர். நிதானமும் அமைதியும் குடிகொண்ட குரு கோபிந்த சிங் அவர்கள் மிகுந்த கவனத்துடன் யுத்த தந்திரங்களை வகுத்தார்.

தன் மூத்த சகோதரனின் வீரத்தையும் தியாகத்தையும் கண்ட 15 வயதே நிரம்பிய இளவரசர் ஜுஜகர் சிங் தானும் யுத்தத்தில் தன்னை ஒப்பு கொடுக்க தந்தையிடம் அனுமதி வேண்டினார். குரு கோபிந்த் சிங் ஜி அவர்கள் மெய்மையை நிலை நாட்டுவதற்கான போரில் தன் இரு புதல்வர்களையும் மனமுவந்தும் உற்சாகத்துடனும் ஈடுபடுத்தினார். கொடுங்கோலர்களின் இரும்புக்கர ஒடுக்குதல்களுக்கு எதிராகக் கிளர்ந்த, மானுடத் துயர் மீட்கவும் மெய்மைக்குமான அந்தக் கடும்போர் அதுவரை வரலாறு காணாததாகும்.

1705, டிசம்பர் 7 அன்று இளவரசர் ஜுஜகர் சிங் கடைசிப் படையணியை தலைமை வகுத்துச் சென்றார். கோட்டை மதிலுக்கு வெளியே பிரவேசித்து அவர்களது "சத் ஸ்ரீ அகால்" என்னும் வெற்றி முகழக்கம் களமெங்கு அதிர்ந்தது. தனது இரண்டாவது மகனையும் கொடிய களத்துக்கு அனுப்பிய குரு கோபிந்த் சிங்கின் தியாகத்தைக் கண்டு எதிரிகளே அதிர்ந்து போயினர். அவர்கள் முழுபலத்துடன் முன்னேறி வந்தனர். அவர்களது தாக்குதல்களை இளவரசர் ஜுஜகர் சிங்கும் வீரர்களும் துணிந்து எதிர்கொண்டனர். ஆனால் எதிரிகளுடன் கடும்போர் புரிந்தபின் சூரிய அஸ்தமனத்தில், தன் மூத்த சகோதரர் படுகொலையான அதே இடத்தில் இளவரசர் ஜுஜகர் சிங்கும் களத்தில் வீரமரணம் அடைந்தார்.

தன் இரு புதல்வர்களின் வீரத்துணிவையும் உயிர்த் தியாகத்தையும் கோட்டையின் உச்சியிலிருந்து பார்த்திருந்த குரு கோபிந்த் சிங் ஜி அவர்கள் , அவர்களின் மகத்தான செயலுக்காக சிரம் தாழ்த்தி இறைவனுக்கு நன்றி தெரிவித்தார்.

## பாலக இளவரசர்கள்



இளவரசர் ஜொரோவார் சிங் – இளவரசர் ஃபதே சிங்

அனந்தபூரில் 1696, நவம்பர் 17 இல் குரு கோபிந்த சிங் ஜி - மாதா ஜிதோ ஜி தம்பதியருக்கு மூன்றாவது மகனாகப் பிறந்தவர் இளவரசர் ஜொரோவார் சிங். 1705 , டிசம்பர் 5-6 நாட்களில் அனந்தபூரிலிருந்து புலம்பெயர்ந்தபோது அவருக்கு ஒன்பது அகவையே நிரம்பியிருந்தது.

1700, டிசம்பர் 5 இல் மாதா ஜிதோ ஜி மறைந்த பின், இளவரசர் ஜொரோவார் சிங்கும் , 1699, ஃபிப்ரவரி 25 இல் பிறந்த அவரது இளவல் ஃபதே சிங்கும் தங்கள் பாட்டியார் மாதா குஜாரி ஜியின் ( குரு தேக் பகதூர் ஜியின் மனைவியார்) அரவணைப்பில் வளர்ந்தார்கள்.

சீக்கியப் படையணி அனந்தபூரை விட்டு வெளியேறியபோது மாதா குஜாரி ஜி இருவரையும் தனது பாதுகாப்பில் அழைத்து வந்தார். படையாணி குதிரைகளில் ஸர்ஸா நதியோடையைக் கடந்த போது மாதாவும் இரு பாலகர்களும் குரு கோபிந்த சிங் ஜியின் பிரதான குழுவிலிருந்து பிரிந்துவிட்டனர். மூவரும் கடுமையான நிலவெளியில் கொடிய வனத்தின் வழியாகக் கடந்து சென்றனர். அவர்கள் பல வன விலங்குகளை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. ஆனால் பாலக இளவரசர்கள் இருவரும் குருபாணியை பிரார்த்தித்தபடி வீறு நடை போட்டு பாட்டியாருடன் சென்றனர். வழியில் பாட்டியார் சொல்லிவந்த சீக்கிய சரித்திரக் கதைகள் அவர்களுக்கு வீரமூட்டியது.


நதியோடையை வெற்றிகரமாகக் கடந்த அவர்களது சமையலர் கங்கு , அவர்களை கேஹ்ரி கிராமத்திலிருந்த தனது சொந்த வீட்டிற்கு அழைத்துச் சென்றார். தற்போது சஹேரி என அழைக்கப்படும் இப்பகுதி இன்றய ரோபார் மாவட்டத்தின் மொரிண்டாவுக்கு அருகே உள்ளது. குதிரையின் சேனத்தை அவிழ்த்தபோது , அதில் ஒரு பையில் ரொக்கமாக பணம் இருப்பதை அவர் கண்டார். இது அவரை துரோகத்திற்குத் தூண்டியது. அவர் அந்த சேனப் பையை திருடியதோடல்லாமல் , தன்னிடம் தஞ்சமடைந்துள்ள அந்த மூவரையும் சன்மானத்திற்காக அரசாங்கத்திடம் காட்டிக் கொடுக்கவும் துணிந்தார். குரு கோபிந்த் சிங் மற்றும் குடும்பத்தினர் எவரேனும் குறித்து துப்பு கொடுப்பவருக்கு சிந்து மாகாணத்தின் நவாப் சன்மானம் அறிவித்திருந்ததை அவர் அறிந்திருந்தார். குருவின் குடும்பத்தாருக்கு அடைக்கலம் கொடுப்பதால் தனக்கு ஏதும் நேர்ந்துவிடுமோ என்ற அச்சமும் இன்னொரு புறம் சன்மானத்தின் மீதான ஆசையும் அவரை அலைக்கழித்தது. இறுதியில் அவரது பேராசை வென்றது. மொரிண்டாவின் ரங்கார்ஹ் அதிகாரிகளை அவர் வீட்டிற்கு அழைத்துவந்து மாதா குஜாரி ஜியையுமிரு இளவரசர்களையும் காட்டிக் கொடுத்தார்.

சம்கௌர் போர்க்களம் மூண்ட 1705, டிசம்பர் 7 இன் துரதிஷ்டமான காலையில் , மாதா குஜாரியும் இளவரசர்கள் ஜோராவர் சிங்கும் ஃபதேஹ் சிங்கும் மொரிண்டாரின் ரங்கார் அதிகாரிகளான ஜானி கான், மனி கானால் கைது செய்யப்பட்டனர். அன்றிரவு அவர்கள் கோத்வாளி காவல் நிலையத்தில் சிறைவைக்கப்பட்டனர். இரவு முழுவதும் இரு பாலக இளவரசர்களும் , சீக்கிய வீரதீரக் கதைகளையும் , குரு அர்ஜன் தேவ் மற்றும் குரு தேக் பகதூரின் தியாக சரித்திரத்தையும் அவர்களது பாட்டியார் சொல்லக் கேட்டனர். அடுத்த நாள் அவர்கள் ஸிர்ஹிந்துக்கு அழைத்தச் செல்லப்பட்டனர். அவர்களது கைதுச் செய்தி எங்கும் பரவிவிடவே வழிநெடுகிலும் மக்கள் திரளாகக் கூடினர். இரு பாலகர்களும் வயது முதிர்ந்த மாதா குஜாரியும் கைது செய்யப்பட்டிருப்பது மக்களிடையே அதிர்வலைகளை ஏற்படுத்திற்று. பாலக இளவரசர்களின் அச்சமற்ற தோரணை மக்களுக்கு எழுச்சியூட்டியது. “ துணிச்சலான தந்தையின் துணிச்சலான புதல்வர்கள்” என அவர்கள் முழங்கினர்.

ஸிர்ஹிந்தை அடைந்ததும் , அவர்கள் அன்றிரவு குளிர் கோபுரம் எனப்படும் தண்டா புர்ஜ் கோட்டையில் சிறைவைக்கப்பட்டனர். குரு கோபிந்த் சிங் அவர்களின் பக்தரான மெஹ்ரா எனப்படும் தண்ணீர் சேந்துனரான பாய் மோத்தி, குளிர்கோபுரத்தில் பாட்டியாருடன் இரு குழந்தைகளும் பசியுடன் இருப்பதறிந்து தன் உயிரைப் பணயம் வைத்து , அவர்களுக்கு பால் கொண்டுசென்று கொடுத்தார். பின்னாளில், இளவரசர்களுக்கு பால் கொடுத்தற்காக அவரும் அவரது குடும்பத்தினரும் கோஹ்லு எனப்படும் அரவை யந்திரத்தில் உயிருடன் அரைத்துக் கொல்லப்பட்டனர்.

1705 , டிசம்பர் 9 அன்று இரு பாலக இளவரசர்களும் ஃபாஜ்தார் நவாப் வாசிர் கான் முன் ஒப்படைக்கப்பட்டனர். வாசிர் கான் அப்போதுதான் தனது பிரபுத்துவ கூட்டாளி மலேர்கோட்லாவின் நவாப் ஷேர் முகமது கானுடன் சம்கௌரிலிருந்து திரும்பியிருந்தார். வாசிர் கான் இளவரசர்கள் இருவரையும் இஸ்லாமுக்கு மதம்மாறச் சொல்லி வற்புறுத்தி , அதற்கு ஈடாக பதவிகளும் செல்வமும் தருவதாக அழுத்தம் கொடுத்தார். ஆனால் அதற்குப் பணியாத இளவரசர்கள் வாசிர் கானின் வற்புறுத்தலை துணிச்சலாக நிராகரித்தனர்.

மதம் மாறத் தவறினால் அவர்கள் மரணதண்டனைக்கு உள்ளாவார்கள் என மிரட்டப்பட்டனர். ஆனாலும் இளவரசர்கள் அடிபணியவில்லை. பின்னர் இருவருக்கும் மரணதண்டனை அறிவிக்கப்பட்டது. ஒன்றுமறியா பாலகர்களைக் கொல்லும் வாசிர் கானின் கொடிய உத்தரவை ஷேர் முகமது கான் கடுமையாக எதிர்த்தார். அவர்களை விடுவித்துவிட மன்றாடினார். வாசிர் கானின் அமைச்சரான சுச்சா நந்த் , தனது எசமானுக்கு விசுவாசத்தைக் காட்ட இந்த சந்தர்ப்பத்தில் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தார். அவர் சந்தர்ப்பம் பார்த்து, “எதிரிகளை முளையிலேயே கிள்ளி விட வேண்டும். எனவே உடனே மரண தண்டனையை நிறைவேற்றுவோம்” என அறிவுறுத்தினார். ஆனால் ஷேர் கான் பாலகர்களை விடுவிக்கும்படி தொடர்ந்து வலியுறுத்தியதால், இளவரசர்கள் இருவருக்கும் மதமாற்றத்திற்கு இணங்குவதற்கு கூடுதல் அவகாசம் அளிக்கப்பட்டது.



இளவரசர்கள் இருவரும் , கூதிர்காலத்தின் கடுங்குளிர் கோபுரத்தில் , தங்கள் பாட்டியாரின் மடியில் இரு நாட்களைக் கழித்தனர். அடுத்த நாள், அரச நீதிசபைக்குச் செல்லும் முன்பாக , மாதா குஜாரி இரு பாலகர்களையும் கட்டியணைத்து ஆசி கூறி, சீக்கியத்தின் புனிதத்தையும் மாண்புகளையும் காக்கும்படி கூறினார். இரு இளவரசர்களும் அப்படியே செய்வதாக சத்தியம் செய்து , உற்சாகத்துடனும் வீறுடனும் விடை பெற்றனர். நவாபின் அவைக்கு அவர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர். அரச நீதிசபையை அடைந்தபோது அதன் பெரிய வாயிற்கதவு அடைக்கப்பட்டிருப்பதையும், சிறிய சாளரம் ஒன்றின் வழியாகவே எவரும் உள்ளே வரும்படியான ஏற்பாட்டையும் கண்டனர். நவாபின் தந்திரத்தைப் புரிந்து கொண்ட இளவரசர்கள், முன்னோக்கி அடி வைத்து தலை குனிவுறாதபடி நிமிர்வுடன் சாளரத்தின் வழியே எம்பிக் குதித்தனர். உள்ளே பிரவேசித்தவுடன் இருவரும் சபையிலிருந்த அனைவரையும் நோக்கி :

**" வாஹே குரு ஜி கா கல்சா, வாஹே குரு ஜி கா ஃபதே"** ( கல்சா கடவுளின் உடைமை, வெற்றி கடவுளின் உரிமை" என்னும் சீக்கிய முழக்கத்தை உரக்க ஒலித்தனர்.)

சபையில் இருந்த அனைவரும் இளவரசர்களின் துணிச்சலையும் தீரத்தையும் கண்டு வியந்துபோயினர். நவாப் வாசிர் கான், மதம் மாற்றத்துக்கு ஈடாக அவர்கள் கேட்கும் எதையும் வழங்கத் தாயாராக இருப்பதாகக் கூறினார். இரு இளவரசர்களும் ஒருமித்த குரலில் "எங்களுக்கு உலகியல் செல்வங்கள் ஒரு பொருட்டல்ல, எந்த விலைக்கும் எப்போதும் எங்கள் மார்க்கத்தின் சத்தியத்தில் இருந்து பிறழ மாட்டோம்" என உறுதியுடன் முழங்கினார்கள். "நீங்கள் இருவரும் உலகறியா சிறுவர்கள். உலகின் களிப்புகளையும் இன்பங்களையும் அனுபவிக்க வேண்டியவர்கள். நான் சொல்வதற்கு இணங்கினால் , செல்வ செழிப்பான கொண்டாட்டமான வாழ்க்கையும் சொர்க்கபுரியின் பொன்னுலகும் உங்களுக்காகக் காத்திருக்கின்றன " என இறுதியாக ஒருமுறை நயமாகப் பேசிப் பார்த்தார்.

ஆனால் பாலக இளவரசர்கள் இருவரும் தங்கள் இறை உறுதிப்பாட்டைக் காக்க எந்த இழப்பையும் சந்திக்கத் தயாராக இருந்தனர். "நாங்கள் கொடுங்கோன்மைக்கும் அநீதிக்கும் எதிராகப் போராடுகிறோம். நாங்கள் குரு கோபிந்த் சிங் ஜியின் புதல்வர்கள். குரு தேக் பகதூர் ஜியின் பெயரர்கள், குரு அர்ஜன் தேவ் ஜியின் வழித்தோன்றல்கள். அவர்கள் நெறியில் நடப்பவர்கள். எங்கள் மார்க்கத்தின் சத்தியத்தையும் மாண்பையும் காக்க எந்த இழப்புக்கும் தயார்" என உறுதிபட முழங்கினர்.

" சபையோரில் ஒருவரான திவான் சுச்சா நந்த் இளவரசர்களின் அருகே சென்று "நீங்கள் விடுவிக்கப்பட்டால் எங்கே செல்வீர்கள் " எனக் கேட்டார்.

அதற்கு இளவரசர் ஜொராவர் சிங் "நாங்கள் வனங்களுக்குச் செல்வோம். அங்கு சீக்கியர்களை ஒன்று திரட்டுவோம். வலிமையான குதிரைகளைச் சம்பாதிப்போம். திரும்ப வந்து உங்களையும் உங்கள் படைகளையும் களத்திலே சந்திப்போம்" என்றார்.

இந்தப் பதிலைக் கேட்டு அதிர்ந்த திவான் சுச்சா நந்த் நாவாபை நோக்கி ,

" மதிப்புக்குரியவரே, இந்த துணிச்சல்மிகு சிறுவர்களை தற்போது விடுவித்தால் , அவர்கள் வளர்ந்து அரசுக்கு எதிராகப் போர் தொடுப்பார்கள். எனவே அவர்கள் உடனடியாக தண்டிக்கப்பட வேண்டும். எக்காரணம் கொண்டும் விடுவிக்கப்படக் கூடாது" என்றார்.

இரு இளவரசர்களும் சபையின் போக்கில் கவலையுறாது தங்களுக்குள் உற்சாகத்துடனும் தீரத்துடனும் பேசிக் கொண்டனர். வாழ்வா சாவா என்ற நிலையிலும் இவர்களின் பதற்றமின்மையையும் துணிவையும் கண்டு சபையில் அனைவரும் அதிசயித்தனர்.



இளவரசர்களின் விடாப்பிடியான உறுதிப் பாட்டைக் கண்ட பின்னர், 1705 டிசம்பர் 11 அன்று , பாலகர்கள் இருவரையும் செங்கற் சுவரில் உயிருடன் அடக்கம் செய்யுமாறு மரண தண்டனை அறிவிக்கப்பட்டது. எந்த ஒரு கலக்கமும் இன்றி அந்த உத்தரவை இருவரும் அமைதியுடன் கேட்டிருக்க, சபையோர் அனைவரும் கொடிய உத்தரவைக் கேட்டு அதிர்ச்சியுற்றனர்.

மாலேர்கோட்லாவின் நவாப் ஷேர் முகமது கான், பச்சிளம் பாலகர்களுக்கு இது மிகக் கொடிய தண்டனை என்றும், தந்தையின் செயலுக்காக குழந்தைகளைக் கொல்வது நியாயமாகாது என்றும் கூறி அவர்களை விடுவிக்குமாறு தொடர்ந்து மன்றாடினார்.

இருப்பினும் நவாப் வாசிர் கான் அவரது வேண்டுகோளை நிராகரித்தார். பின் இளவரசர்கள் இருவரும் மீண்டும் குளிர் கோபுரத்துக்கு அனுப்பப்பட்டனர். அவர்கள் அரச நீதிசபையில் நடந்த நிகழ்வுகளைப் பாட்டியாரிடம் விவரித்தனர். அவர்களது துணிச்சலையும் உறுதிப்பாட்டையும் பாராட்டி முதுகில் தட்டிக் கொடுத்த மாதா குஜாரி ஜி , இருவரையும் கட்டியணைத்துக் கொண்டார். அவர் “நீங்கள் இருவரும் உங்கள் தெய்வத்திரு பாட்டனார் மற்றும் தந்தையாரின் மாண்பையும் மதிப்பையும் காத்திருக்கிறீர்கள். கடவுள் எப்போதும் உங்களுடன் இருப்பார்” என ஆசீர்வதித்தார்.

மறுநாள் அவர்கள் மீண்டும் நவாபின் சபைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். நவாப் மீண்டும் இறுதியாக ஒரு முறை மதமாற்றத்துக்கு வற்புறுத்தினார். இளவரசர்கள் வீறுடன்

“எங்கள் மார்க்கத்தை நாங்கள் எப்போதும் கைவிட மாட்டோம். எந்த விளைவுகளும் எங்களுக்குப் பொருட்டல்ல. மரணம் எங்களுக்கு எந்தப் பொருளுமற்றது”

என முடிந்த முடிபாகக் கூறினர். அவர்களது துணிந்த உறுதிப்பாடு நவாபை ஆச்சரியப்படுத்தியது.

மதம் மாறுதல் என்னும் மாற்று சாத்தியப்படாமல் போகவே , செங்கற்சுவர் எழுப்பப்படும் பகுதிக்கு இளவரசர்கள் இருவரும் கொண்டு செல்லப்பட்டனர். இருவரும் அருகருகாக நிறுத்தப்பட்டனர். அங்கிருந்த காஜி “ உயிரை இழக்க வேண்டாம் சிறுவர்களே, இஸ்லாத்துக்கு மாறுங்கள் “ என வற்புறுத்தினார். மரண தண்டனை நிறைவேற்றும் ஊழியர்களும் தொடர்ந்து வற்புறுத்தினார்கள். ஆனால் பாலகர்கள் இருவரும் உறுதிப்பாடு தளராமல் இருந்தனர். “எமது மார்க்கம் எமது சத்தியம், மரணம் எங்களை அச்சுறுத்தாது “ என்றனர்.

பின்னர் இளவரசர்கள் இருவரும் தங்களைச் சுற்றி செங்கற்கள் அடுக்கப்பட்டு, சுவர் மேலுயர மேலுயர குருபாணியை பிரார்த்திக் கொண்டே இருந்தார்கள். பாலகர்களின் தளிருடல்களைச் சூழ்ந்து மார்புப் பகுதி வரை சுவர் எழுந்தபோது , அது இடிந்து விழுந்துவிட்டது. இரு இளவரசர்களும் மூர்ச்சையுற்று நினைவிழந்து மயங்கி விழுந்தனர். (சுவர் திட்டமிட்டே பலவீனாமாகக் கட்டப்பட்து ) மீண்டும் இருவருக்கும் நினைவு திரும்பியதும் மீளவும் இஸ்லாமுக்கு மதம்மாற வற்புறுத்தப்பட்டனர். அவர்கள் உறுதிபட மறுக்கவே இளவரசர் ஜொராவார் சிங்கையும் ஃப்தேஹ் சிங்கையும் சூழ செங்கற்சுவர் எழுப்பப்பட்டு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

மரணக் களத்துக்கு வெகு அருகாமையில் குளிர் கோபுரத்தில் சிறையிருந்த வயதான மாதா குஜாரி ஜி தாங்கொணா செய்தி கேட்டு தன் இறுதி மூச்சை விடுத்தார். தன் பெயரக் குழந்தைகளுடன் அவரும் இறையடி சேர்ந்தார். ஸிர்ஹிந்த் எங்கும் மக்கள் கொந்தளித்தனர். கொடுங்கோலர்களின் கொடுஞ்செயல் கண்டு அனைவரும் கிளர்ந்தெழுந்தனர். குரு கோபிந்த் சிங் ஜி யின் புதல்வர்களின் தியாகத்தையும் வீர மரணமும் கண்டு அனைவரும் சில்லிட்டனர்.



சேத் தோடர் மால் என்னும் ஸிர்ஹிந்தின் செல்வ வணிகர் இறந்த மூவரது உடல்களுக்கும் இறுதிச் சடங்கு செய்தார். இதற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட நிலத்துக்கான விலையாக அந்த நிலப்பரப்பின் அளவுக்கு பரந்து நிறைக்கக்கூடிய தங்க நாணயங்களை அரசுக்கு செலுத்த வேண்டும் என நவாப் நிபந்தனை விதித்தார். அந்த வணிகர் நிலத்தை அளந்து அதன் பரப்பளவுக்கு ஈடான தங்க நாணயங்களைக் கட்டணமாகச் செலுத்தினார்.

வீரமரணம் அடைந்த குரு கோபிந்த சிங்கின் புதல்வர்கள் இருவருக்கும் பாட்டியாருடன் முழு மரியாதையுடன் இறுதி மரியாதை செய்யப்பட்டது.

மனித சரித்திரத்தில் இந்த பாலக இளவரசர்களின் தியாகத்துக்கும் வீரமரணத்துக்கும் இணையான நிகழ்வு வேறொன்றில்லை. இளவரசர் ஜொராவார் சிங்குக்கு அப்போது எட்டு அகவையும், இளவரசர் ஃபதே சிங்கிற்கு ஆறுக்கும் குறைவான அகவையுமேயாகும். அவர்கள் செங்கற்சுவரில் உயிருடன் புதைக்கப்பட்டனர். ஆனால் கொடுங்கோல் அரசின் எதேச்சதிகாரத்துக்கு மண்டியிடவில்லை. இறுதிவரை அவர்கள் தங்கள் மார்க்கத்தில் உறுதிப்பாட்டோடு இருந்தனர். மதம் மாறுவதற்கு அச்சுறுத்தப்பட்ட போதும் மிகுந்த சன்மானங்களும் பதவிகளும் ஈடாகப் பேசப்பட்ட போதும் அவர்கள் துணிந்து நின்றனர்.

“எங்களது சீக்கியப் பாரம்பரியம் குறித்து நீங்கள் ஒருவேளை அறியாது இருக்கலாம். எமது பெருமைமிகு இல்லங்களில், எந்தப் பேரழிவுக்கு முன்பாகவும் எங்கள் நம்பிக்கையைக் காத்து நிற்பதே எமது பாரம்பரியமாகும் ” என அவர்கள் முழங்கினார்கள்.

இக்கொடும் நிகழ்வு நடந்தேறிய , முற்கால ஸிர்ஹிந்த் நகரத்துக்கு அருகேயான அந்தப் பகுதியில் நிறுவப்பெற்ற ஃபதேகார்ஹ் சாஹிபில் தற்போது நான்கு சீக்கிய கோவில்கள் உள்ளன. இந்நிகழ்வை நினைவு கூரும் விதமாக இங்கு ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 25 இல் இருந்து 28 வரை சமயத் திருவிழா அனுசரிக்கப்படுகிறது. இளவரசர்களின் வீரமரணம் குறித்த செய்தியை நூரா மாகி அவர்கள் வந்து கூறிய போது குரு கோபிந்த் சிங் ஜி அவர்கள் ராஜ்கோட்டில் இருந்தார்.

செய்தியைக் கேட்டவுடன் ஒரு அம்பினால் செடி ஒன்றைப் பெயர்த்த குரு கோபிந்த் சிங் ஜி அவர்கள்,

“இது முகலாயப் பேரரசை இந்தியாவிலிருந்து முழுதுமாக வேரறுப்பதற்கான

சகுனத்தின் தொடக்கம்" என்றார்.

அவர் ஔரங்கசீப்புக்கு எழுதினார் : " சூழ்ச்சியாலும் தந்திரத்தாலும் நரி ஒன்று சிங்கத்தின் இரு குட்டிகளைக் கொல்வது ஒரு பொருட்டல்ல. உங்களை வேரறுக்க சிங்கமே இன்னும் உயிருடன் இருக்கிறது"

இளவரசர்களின் வீரமரணம் நாடெங்கிலும் பெருந்துயரையும் கொந்தளிப்பின் அலைகளையும் ஏற்படுத்திற்று. நவாப் வாசிர் கானால் இரு இளவரசர்களும் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டதால் சிர்ஹிந்த் நகரம் சீக்கியர்களிடையே சபிக்கப்பட்ட நகரமாகப் பார்க்கப்பட்து. 1708, நவம்பரில் குரு கோபிந்த் சிங் மறைந்த பின்னர், பாபா பண்டா சிங் பகதூரின் கொடியின்கீழ் அணிதிரண்ட சீக்கியர்கள் ஸிர்ஹிந்தை கடுமையாகத் தாக்கினர். ஸிர்ஹிந்திலிருந்து முகலாயப் படைகள் துரத்தியடிக்கப்பட்டு சப்பார் சீரி போர்க்களத்தில் 1710, மே 12 இல் நவாப் வாசிர் கான் கொல்லப்பட்டார். மே 14 இல் சிர்ஹிந்த் சீக்கியர்களின் வசமானது.

தனது நான்கு இளவரசர்களின் வீரமரணம் குறித்து குரு கோபிந்த் சிங் ஜி அவர்கள் சீக்கியர்களிடையே இவ்வாறு குறிப்பிட்டார் :

**"நான் எனது நான்கு புதல்வர்களைத் தியாகம் செய்தது, உயிருடன் இருக்கும் எனது ஆயிரக்கணக்கான புதல்வர்களைக் காப்பதற்காகத்தான்."**

